RECEIVED
1980-6-24
PERIODICALS
DIVISION
UNIVERSITY [illegible] LIBRARY

பக்கங்கள் 8

# ஈழநாடு
EELANAADU

50 சதம்

மலர் 22 | வைகாசி 22 | றஜப் 20 | இதழ் 115
யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 4-6-80

## மேஜர் சுந்தரராஜன் குழு நாளை கொழும்பு பயணம்

### யாழ். நகரில் இன்று கடைசி நாடகம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 30-ந் திகதி தொடக்கம் யாழ். நகரில் முகாமிட்டிருந்து யாழ். மக்களுக்கு நாடக விருந்து அளித்து வரும் மேஜர் சுந்தரராஜன் கோஷ்டியினரின் நாடகவிழா இன்றுடன் முடிவடைகிறது.

மேஜர் சுந்தரராஜனுடன் இந்தியாவிலிருந்து நடிகர்கள் உதவியாளர்கள் உட்பட 50 பேர் வரை இங்கு வந்துள்ளனர்.

இந்நாடகவிழா கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய ஆலய இராஜகோபுர நிதிக்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

8-ம் பக்கம் பார்க்க

### வேலைநிறுத்தம் நடைபெறாத இடத்தில்

# மறியல்போராட்டம் நடத்துவது சட்டவிரோதமானது!

## இதனைத் தடுக்க பொலிசார் உறுதியான நடவடிக்கை

### பாராளுமன்றத்தில் பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு)

''சர்வதேச தொழிற்சங்க சம்மேளனத்தின் தீர்மானத்தின்படி வேலை நிறுத்தம் நடைபெறாத ஒரு இடத்தில் சுலோக அட்டைகளைத் தாங்கி மறியல் போராட்டம் (பிக்கட்டிங்) நடத்துவது சட்டவிரோதமாகும்''.

''இந்த நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் சகல அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்க அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும் என்று எதிர்க்கட்சியினருக்கு கூறிவைக்க விரும்புகிறேன். இதன் அடிப்படையில் சட்டத்திற்கு விரோதமான நடவடிக்கைகளைத் தடுக்க அரசு பொலிசாருக்கு அனுமதி வழங்கியுள்ளது. சட்டவிரோதமான நடவடிக்கைகளைத் தடுக்க பொலிசார் உறுதியான நடவடிக்கைகளை எடுப்பார்கள்''.

இவ்வாறு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

மஹர எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவின் கேள்வி ஒன்றுக்கு ஒத்திவைப்புப் பிரேரணையின்போது பதிலளிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா ஒத்திவைப்புப் பிரேரணையின்போது பேசுகையில், ''எதிர்க்கட்சிகள் நடத்தவிருக்கும் எதிர்ப்பு நடவடிக்கைகளை ஜாதிகசேவா சங்கம் என்ற தொழிற்சங்கத்தின் பெயரில் காடையர்களைக் கொண்டு தாக்குவதற்கு அரசு திட்டமிடுகிறதாக தெரிகிறது. இதனைத்

[8-ம் பக்கம் பார்க்க]

### தேசிய எதிர்ப்பு இயக்கத்தில்

## தமிழ்த் தொழிலாளர்கள் அனைவரும் பங்குபற்றுங்கள்

### த. தொ. ச. கூட்டணித்தலைவர் வேண்டுகோள்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக நாளை நடைபெறவிருக்கும் தேசிய எதிர்ப்பு இயக்கத்தில் சேர்ந்து, தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியும், ஏனைய தொழிற்சங்கங்களும் அரசுக்கு தமது தீவிர எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்று தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணித் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் விடுத்த அறிக்கையில் கேட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

உலகத்தில் வேறெந்த நாடுகளிலும் இல்லாத வகையில் தமிழ்த் தொழிலாளர்கள் சிங்கள ஏகாதிபத்திய அரசால் உத்தியோக மொழி தகைமையின்ற போர்வையில் பழிவாங்கப்பட்டு வருகின்றனர்.

''இலங்கையிலுள்ள இரு தேசிய இனங்களில் ஒரு தேசிய இனத் தொழிலாளருக்கு இல்லாத மொழித்தேர்ச்சி நிபந்தனையும், கட்டுப்பாடுகளும் மற்றைய தேசிய இனத் தொழிலாளருக்கு விதிக்கப்பட்டு அவர்கள் கொடுமைப் படுத்தப்படும் நிலைமையில்

(8-ம் பக்கம் பார்க்க)

## ''கறுப்புப்பட்டி அணிந்து எதிர்ப்பை தெரிவியுங்கள்''

### இளைஞர் பேரவை வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

''தமிழ்த்தேசிய இனம் தனது மறுக்கமுடியாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் கோரிநிற்கும் தமிழீழ விடுதலையை அங்கீகரிக்க மறுத்து அடிமைப்படுத்துவதைக் கண்டித்து நாளை பொது மக்கள், மாணவர்கள் தொழிலாளர்கள் கறுப்புப் பட்டி அணிந்து எதிர்ப்பைத் தெரிவிக்கவும்''

இவ்வாறு தமிழ் இளைஞர் பேரவையின் அமைப்புச் செயலாளர் திரு இரா வாசுதேவா, நிர்வாகச் செயலாளர் திரு எஸ் பி இறைகுமாரன் ஆகியோர் கூட்டாக [illegible]ள்ள அறிக்கையில் [illegible]

[8-ம் பக்கம் பார்க்க]

## அரசுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள்

### அமைதிக்குப் பங்கம் ஏற்படின் தடைசெய்யப்படும் என்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு ஆதரவான தொழிற்சங்கங்கள் நாளைபகல் போசன இடைவேளையின் போது அரசுக்கு ஆதரவாக சுலோக அட்டைகளைத் தாங்கி ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதுடன் கூட்டங்களையும் நடத்தவுள்ளனர்.

அரசுக்கு எதிரான தொழிற்சங்கங்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள விரும்புவதால் இருசாராரும் அமைதிக்குப் பங்கம் விளைவிக்க முயன்றால் இருசாராரும் தடைசெய்யப்படுவார்கள்

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ''அரசுக்கு ஆதரவான கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் அமைதியான முறையில் நடத்தப்படும். எதிரணிகள் நடத்தவிருக்கும் மறி

[8-ம் பக்கம் பார்க்க]

## அ. எ. சே. காங்கிரஸ் கலந்துகொள்ளாது

(யாழ்ப்பாணம்)

தேசிய எதிர்ப்பு தினத்தில், அரசாங்க எழுதுவினைஞர் சேவையாளர் காங்கிரஸ் கலந்துகொள்ளாதென்று அதன் தலைவர் திரு. ஏ. விநாயகமூர்த்தி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நாளை நடைபெறவிருக்கும் இந்த இயக்கம், அரசியல் கலப்புள்ளதாகக் காணப்படுவதால், இதில் கலந்துகொள்ளவில்லையென்றும் அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊழியரை எதிர்நோக்கும் விலைவாசி உயர்வு பற்றிய பிரச்னைகள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் தீர்த்துக் கொள்ளலாமென்றும் தெரிவித்துள்ளார்.

### ரியூட்டரி மாணவி கமலம் கொலை வழக்கு:

# ராஜனின் வாக்குமூலத்தில் சட்டப்பிரச்னை!

## பொலிசாருக்கு உதவியாக சட்டத்தரணி நியமனம்

(புலோலி)

கமலம் கொலைவழக்கு சம்பந்தமாக முதலாவது சந்தேக நபர் நீதிபதிக்கு அளித்த ரகசிய வாக்குமூலத்தில் சட்டப் பிரச்னைகள் இருப்பதாலும், விசாரணைக்கு எடுக்கப்பட்டு ஒரு மாதத்திற்குள் விசாரணையை முடிக்கவேண்டியிருப்பதாலும் அரசதரப்பில் பொலிசாருக்கு ஆதரவாக சட்டத்தரணி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

[illegible] ரணின் கொலைவழக்கு நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி திரு கே. எஸ். மகேசன் முன்னிலையில் நடைபெற்றது.

முதலாவது சந்தேகநபரான ராஜன் அல்லது ராஜ்குமார், இரண்டாவது சந்தேகநபரான பொன்சியஸ் பேர்னாண்டோ ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

பொலிசாரால் பதிவு செய்யப்பட்ட 97 சாட்சிகளின் பதிவுப்பிரதிகளும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த வழக்கில் பெருந்தொகையானவர்கள் சாட்சியமளிக்கவிருப்பதாலும், ஒரு மாதத்திற்குள் விசாரணையை முடிக்க வேண்டியிருப்பதாலும் சென்ற தவணையின்போது முதலாவது சந்தேகநபர் ராஜன் நீதிமன்றத்தில்வைத்து நீதவானுக்கு அளித்த வாக்கு மூலத்தில் சட்டப்பிரச்னைகள் எழக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாலும் பொலிசாருக்கு உதவியாக வழக்கை நடத்த அரசதரப்பில் சட்டத்தரணி திரு எம். சோமசுந்தரத்தை நியமிப்பதென நீதவான் தெரிவித்தார்.

கொலைசெய்யப்பட்ட கமலத்தின் தாயார் நீதிமன்றத்திற்கு வரும்போது அவருக்கு தீங்கு விளைவிக்கப்படவிருப்பதாக தனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதாகவும் இரண்டாவது சந்தேகநபரால் முதலாவது சந்தேகநபரின் மாமனாருக்கு தீங்குசெய்யக் கூடிய சாத்தியக்கூறுகள்

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

மரக்கடைச்சல் வேலை தெரிந்தவர்களும் சித்திரம் வரைபவர்களும் தேவை. இருபாலாரும் கடித மூலம் தொடர்பு கொள்ளவும் செல்வா புறடக்ஸ், ஆடியபாதம் வீதி, நல்லூர். 5944

கிறைண்டிங் மில் வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை தேவாஸ் கிறைண்டிங் மில், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5913

இரண்டு நில அளவையாளர்கள் தாராதரம். அளவையியல் உயர் டிப்புளோமா தராதரப்பத்திரம், பாஸ்போட் ஆகியவற்றுடன் நேரில் சந்திக்கவும் 28, மடம் வீதி, யாழ்ப்பாணம். 5941

### விற்பனைக்கு

24ஸ்ரீ தொடர் இலக்கமுள்ள மொறுஸ் முச்சக்கர லொறி விற்பனைக்குண்டு S. இலங்கநாதன் J P, மணற்குடியிருப்பு, முல்லைத்தீவு. 5942

### பயிற்சி

அரிய சந்தர்ப்பம்! உடன் நேரில் தொடர்பு கொள்ளவும் முன் அனுபவம் சிறிதும் தேவையில்லை அனைவரும் விண்ணப்பிக்கலாம். றேடியோ - டெலிவிஷன் மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி - ஏயர் கொண்டிசனிங் (Air - Conditioning & Refrigeration) மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி, வெல்டிங் டிப்பிளோமாப் பயிற்சி ஆரம்பம் 9-6-80. நாவலர் அக்கடமி, 11, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். சகல நாட்களிலும் திறந்திருக்கும். 5945

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய
## அறிவித்தல்

யாழ்ப்பாண
மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், ஓட்டுமடம் வீதி, 15-ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தவனம் கை. பெண் குணபூசணி அம்மாள் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்-
— மரணமெய்தியவர்

பொன்னம்பலம் சண்முகநாதன் இல: 15, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.
— மனுதாரர்

மரணசாதன
நியாயாதிக்கம் இல: 3508

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலேயே யர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இதனால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு ஆடி மாதம் 4-ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங் காட்டுமாறு, இதனால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்.

1980-ஆம் ஆண்டு ஆனி மாதம் 3-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

5947

மரம் கடத்தல் வழக்கு:

# எதிரிகள் விடுதலை; மரங்களும்
## லொறியும் திரும்ப ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

உத்தரவுப்பத்திரமின்றி லொறியில் அரிந்த பாலைமரம் ஏற்றிச் சென்றதாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட லொறியும் மரங்களும் எதிரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வழக்கு கிளிநொச்சி நீதவான் திரு. ஜெகசோதிமுன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில், இ. இராசரத்தினம், தணிகாசலம் வே. சரவணபவான் ஆகியோர் உத்தரவுப் பத்திரமின்றி லொறியில் அரிந்த பாலை மரங்களை ஏற்றிச்சென்றதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி வி என். நவரத்தினம் சட்டத்தரணிகள் கார்த்திகேசு, எஸ். செல்லத்தம்பி ஆகியோரின் உதவியுடன் ஆஜரானார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிப் பக்கமாக சென்ற லொறியை மறித்து சோதனையிட்டபொழுது இருபத்திரு மேற்பட்ட அரிந்த பாலை மரத்துண்டுகள் இருந்ததாகவும் எவரிடமும் உத்தரவுப்பத்திரம் இல்லையென்றும், பொலிசார் சாட்சியத்தின் போது தெரிவித்தனர்.

எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி வி. என். நவரத்தினம், நியூசாசிலுக்கு நிலக்கரி ஏற்றிச் செல்பவர் வியாபார நோக்குடன் செல்லமாட்டாரென்றும், அதேபோல், யாழ்ப்பாணத்திலிருந்து கரைச்சிப் பகுதிக்கு மரத்தை ஏற்றிச் செல்லுபவர் வியாபாரத்திற்காக ஏற்றிச் சென்றிருக்க மாட்டாரென்றும் கூறினார். இம் மரங்கள் சட்டபூர்வமாகவே ஏற்றிச் செல்லப்பட்டதென்றும் வாதிட்டார்.

இந்த விவாதத்தை ஏற்ற நீதிபதி எதிரிகளை விடுதலை செய்து, மரங்களையும், லொறியையும் எதிரிகளிடம் திருப்பி ஒப்படைக்குமாறு தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கை உபபொலிஸ் அதிபர் திரு. இராமநாதன் வழக்கை நடத்தினார். (ச)

# திருமுறைமன்றத்தின்சேவை பாராட்டுக்குரியது''

(யாழ்ப்பாணம்)

''யாழ் திருமுறை மன்றம் தேவார வகுப்பை ஆரம்பிப்பது பாராட்டத்தக்கது. இங்கு திருமுறை வகுப்பை நடாத்தும் ஆசிரியர் பண்ணை சைப்டிலவர் திருஞான சம்பந்தன் பொருளறிந்து ஒதியும், ஓதுவித்தும் வருபவர். மலாயா, சிங்கப்பூர் நாடுகளிலும் இவர் பாராட்டுப் பெற்றவர்.''

யாழ். திருமுறை மன்றத்தினர் நடாத்திய திருஞான சம்பந்தநாயனார் குருபூசையில் கலந்துகொண்டு தலைமை வகித்துப் பேசுகையில் திரு க. சொக்கலிங்கம் குறிப்பிட்டார்.

திருநெல்வேலி வாலையம்மன் கோவில் பண்டபத்தில் நடைபெற்ற இக்கு பூசை விழாவை திரு ஜெ நாகேஸ்வரசர்மா மங்களவிளக்கேற்றி வைத்தார் திரு சி. நாகரத்தினம் நாயனார் நால்வரின் திருவுருவப்படம் அன்பளித்தார். தொழிலதிபர் திரு. க. கனகராசா வெளியிட்டுவைத்தார்.

# ஆழியவளை பஸ்சேவைக்கு அடிக்கடிநேரும் விபத்து

(பச்சிலைப்பள்ளி)

யாழ்ப்பாணம்— ஆழியவளை பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இரண்டு பஸ்களும் கடந்த வாரம் விபத்தில் சிக்கி சேதமடைந்துள்ளன.

கடந்த புதன்கிழமை இப்பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட யாழ். டிப்போவைச் சேர்ந்த பஸ் பளைக்கு அண்மையில் பாதையைவிட்டு விலகி பழைய தம்பு ஆலைக் காணிக்குள் சென்று மனைமரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது. பஸ்சின் முற்பகுதி பலத்த சேதத்துக்குள்ளாகியதுடன் பஸ்ஸில் பிரயாணம் செய்த பிரயாணிகள் பலரும் காயமடைந்து பளை அரசினர் வைத்தியசாலைக்கும் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கும் எடுத்துச் செல்லப்பட்டார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை இப்பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த மற்ற பஸ்ஸும் கச்சேரிக்கண்மையில் டிராக்டருடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

பளையில் விபத்துக்குள்ளாகிய பஸ் இரு வாரங்களுக்கு முன்புதான் இப்பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இப்பாதையில முன்பு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பஸ் நான்கு மாதங்களுக்கு முன்விபத்துக்குள்ளாகிய தால் கடந்த நான்கு மாதங்களாக இப்பாதையின் போக்குவரத்து சீர்குலைந்திருந்தது. அண்மையில் யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி அப்பகுதிகளுக்கு விஜயம் செய்தபோது மக்கள் தமது போக்குவரத்துக் கஷ்டங்களை எடுத்துக்கூறியதின் பேரில் விபத்துக்குள்ளாகிய பஸ்சுக்குப் பதிலாக வேறு ஒரு

(4-ம் பக்கம் பார்க்க)

### ஏலவிற்பனவு

கொக்குவில் ஆனைக்கோட்டை வீதி செ. வீ. கனகசபை அவர்களிடம் 25-12-74 தொடக்கம் 30-04-79 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 21-6-80 சனிக்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் அதே அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

**வ. சி. மகாதேவன்,**
ஏலவிற்பனவாளர்.
உண்ணாபண்ணை. 5917

### தேவை

பிரபல ரேடியோ ரி. வி. விற்பனை ஸ்தாபனத்திற்கு கணக்கியல், ஆங்கிலம் முதலியவற்றில் அறிவுள்ள நிருவாக முகாமையாளர் உடனடியாகத் தேவை. வயது 35-50க்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் நிர்ணயிக்கலாம். விண்ணப்பப்பத்திரத்தை சொந்தக் கையெழுத்தில்எழுதி, முன்அனுபவம், நற்சாட்சிப்பத்திரம், பிறப்புச் சாட்சிப்பத்திரம் முதலியவற்றுடன் இணைத்து 12-6 80முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 0389
C/O, ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

# PERCIVAL HALL

விரிவுரையாளர்களால் தயாரிக்கப்பெற்ற

**I C M A May 1980**

பரீட்சை வினுக்கட்கு விடைகள்

**I A A December 1979**

பரீட்சை வினுக்கட்கு விடைகள்

## பூபாலசிங்கம் புத்தகசாலையிலும்

இதர
புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
5940

# சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி-80

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை பஸ் நடத்துநரிடமும் ஒழுக்கம், அவதானம் திறமை ஆகிய நற்பண்புகளை பஸ் சாரதிகளிடமும் வளர்க்கும் வண்ணம் யாழ் ரோட்டறிக் கழகம்

**"சிறந்த நடாத்துநர் ; சிறந்த சாரதி"**
போட்டியை

இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச்சபையுடனும் "ஈழநாடு" பத்திரிகையுடனும் இணைந்து நடாத்த எண்ணியுள்ளது. இம்முறை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு டிப்போக்களையும் உள்ளடக்கிப் போட்டி நடாத்தப்படுகிறது.

இந்த டிப்போக்களிலிருந்து செயற்படும் பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சிறந்த சாரதிகளையும் நடத்துநரையும் தெரிவு செய்ய உதவும் வண்ணம் "ஈழநாடு" பத்திரிகையில் முதல் பிரசுரிக்கப்படும் கூப்பன்களை நிரப்பி அனுப்பும் படி யாழ். ரோட்டறிக் கழகம் பஸ் பிரயாணிகளை அன்புடன் கோருகிறது.

☆ **சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி கூப்பன் அனுப்பும் அதிர்ஷ்டசாலிகளுக்கும் அரிய மூன்று பரிசுகள்!**

விரையுங்கள்!!

1-வது பரிசு ரூபா 500 00
2-வது பரிசு ரூபா 250-00
3-வது பரிசு ரூபா 100-00

முடிவு திகதி 10-6-1980

கீழே தரப்படும் கூப்பனைச் சந்தரித்து நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி:

ரோட்டேறியன் பல்வைத்தியகலாநிதி
பா. சோ. பாரதி
தலைவர் - தொழிற்சேவைப் பகுதி
பல் வைத்திய நிலையம்,
568 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

சிறந்த பஸ் நடத்துநர்-சாரதி தெரிவுப் போட்டிக் கூப்பன்

சிறந்த நடத்துநர் பெயர் ............ சிறந்த சாரதி பெயர் ............

டிப்போ :- யாழ்ப்பாணம்-காரைநகர்-பருத்தித்துறை-கிளிநொச்சி-முல்லைத்தீவு-மன்னார்-வவுனியா

(நீங்கள் தெரிவுசெய்யப்பட்டவர் கடமையாற்றும் டிப்போவின் கீழ் கீறிடுக)

பஸ் செல்லும் வழி இலக்கம் (Route No..............)

அனுப்புபவர் பெயர்........................ஒப்பம்...........

விலாசம்.......................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

உற்ருர், உறவினர் உன்னைப் பிணைக்கும் சங்கிலிகளே.

— சுவாமி சிவானந்தர்

**மக்கள் கருத்து**

## ஆலயங்களில் உயிர்ப்பலிதடை

ஆலயங்களில் உயிர்ப்பலி பற்றி அண்மையில் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன.

ஆதிகாலத்தில் மாபெரும் வீரர்கள், தலைவர்கள், அரசர்கள் போன்ருேர் அஸ்வமேத யாகங்களில ஈடுபட்டிருந்தார்கள் இவர்கள் இந்த யாகங்களில் குதிரைகளைப் பலி கொடுத்தார்கள்.

ஆதிகாலத்தில் மிருகபலியை ஆரம்பித்தது பாமரசைவ சமயிகள் என்பதே ஒரு சாராரின் கருத்து வைஷ்ணவர்கள் இதில் பங்கு பற்றியதாகத் தெரியவில்லை. அன்றும் இன்றும் சமகாலத்து சிந்தனையாளர்கள் மிருகபலியையிட்டு வெட்கமுற்ருர்களே ஒழிய ஆமோதிக்கவில்லை.

ஆனல் அண்மைக் காலம் வரை மூட நம்பிக்கையுடைய இந்துக்கள் அநேகமாக கோழிகளையும், ஆடுகளையும் வேள்விக் காலங்களில் அவர்களின் நேர்த்திக்கடன்களுக்குப்பலி கொடுத்து வந்துள்ளார்கள்.

வேள்விக் காலங்களை ஒவ்வொரு கிராமங்களிலும் எவ்வளவு குதூகலமாகக் கொண்டாடினூர்கள் என்பது வாசகர்களுக்குத் தெரிந்ததே.

எதுபோதும் "இந்துமதசபை"களும், "இந்துசமய"ங்களும் ஆலயங்களின் முன் மிருகபலி வேண்டாமென்று வாதாடுகிருர்களே ஒழிய மிருகங்களைக் கொல்லுவதைக் கண்டிப்பதாகத் தெரியவில்லை.

மாமிசம் மாமிசமே, கசாப்புக்கடையில் இருந்து வந்தாலென்ன, ஆலயங்களின் முன்னிருந்து கொணர்ந்தாலென்ன இரண்டும் ஒன்றே.

எனவே பகுத்தறிவுள்ள சைவ சமயிகள் விரும்ப வேண்டியது கொல்லாமையையே ஆலயங்களின் முன் நரபலி வேண்டாமென்று வெறும் சுலோகத்தை மட்டும் எழுப்புவதிஞல் ஆசாட பூதிகள் என்ற நாமத்தை ஏற்கவேண்டி வருமல்லவா?

சைவசமயமும் மாமிசம் புசித்தலும் இருதுருவங்கள் என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

ந. தேவராஜன்
யாழ்ப்பாணம்.

---

கலைவாணி

## ச. ச. நிலைய ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதி கலைவாணி சனசமூக நிலையத்தின் 5வது ஆண்டு விழா அடுத்த மாதம் 5ம் திகதி நடைபெறவுள்ளது. இவ்விழாவை யொட்டி 25 மைல் சயிக்கிள் ஓட்டம், 7மைல் மரதன் ஓட்டம், நாடகம் ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளது.

இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 15-ம் திகதிக்குமுன்னர் செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## பதவி உயர்வு

(மண்டைதீவு)

ஊர்காவற்றுறை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் வேலைத்தல மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய திரு எஸ் படிகலிங்கம் தொழில்நுட்ப உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். (அ)

---

"தமிழ் மக்களின் போராட்டங்களை முறியடிக்க

# அரசு பாதுகாப்புப் படைகளுக்கு பெருமளவு பணம் செலவிடுகிறது

## இடதுசாரிகள் இதை உணர வேண்டும்" என்கிருர் யாழ். எம். பி. 'யோகேஸ்'

(யாழ்ப்பாணம்)

"ஐக்கிய தேசியக்கட்சி அரசு தொழிலாளி வர்க்கத்தினதும், தமிழ்மக்களினதும் போராட்டங்களை முறியடிப்பதற்காகப் பாதுகாப்புப் படையினருக்குப் பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்கின்றது. அரசின் இந்த விபரீதப் போக்கை வெறுமனே பார்த்துக்கொண்டிராது அரசுக்கு எதிரான போராட்டத்தில் சகலரும் ஒன்று சேர்ந்து போராடவேண்டும்."

யாழ் மாநகர மண்டபத்தில் நடந்த தேசிய எதிர்ப்புத் தின ஆதரவுக் கூட்டத்தில் பேசிய யாழ். எம் பி. திரு, வெ. யோகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறிஞர்.

நாளை வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் தேசிய எதிர்ப்புத் தினத்தை ஆதரித்து திரு. கு. பரராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. யோகேஸ்வரன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

"ஒரு நாட்டிற்குத் திட்டமிட்ட பொருளாதாரம் இருக்கவேண்டும் இந்த அரசிடம் திட்டமும் இல்லை. பொருளாதாரமும் இல்லை.

"இந்த அரசு உலகக் கடனில் வாழ்கிறது. வெட்கம் கெட்ட நிலையில் இந்த அரசு செயல்பட்டுவருகிறது தொழிற்சங்கவாதிகள் போராட்டம் நடத்திஞல் குண்டர்களை வைத்து அப்போராட்டத்தை உடைத்தெறிந்து வருகிறது இந்த அரசு.

"இடதுசாரிகளுக்கு ஒரு முக்கிய பொறுப்பு இருக்கின்றது அதையுணர்ந்து செயல்படவேண்டும்.

"தமிழ்மக்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தப் பெருந்தொகையான பணத்தைப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக அரசு செலவுசெய்து வருகிறது இதனை இடதுசாரிகள் உணர்ந்து செயல்படவேண்டும்.

"உலக நாடுகளில் ஊழியர்களுக்கு அதிக சம்பளம் வழங்கப்படுகிறது. அதனல் அங்கு பொருட்களின் விலை கூடுதலாக இருக்கிறது. அதேவேளையில் இங்கு குறைந்த சம்பளம் வழங்கப்படுகிறது. அதனல் பொருட்களின் விலைகளும் உலக நாடுகளைவிடக் குறைவான விலையில் விற்கப்படுகிறது. அப்படி இருந்தபோதும் உலகநாடுகளைவிட இங்குதான் வாழ்க்கைச் செலவு அதிகமென்பதை அரசு மறுக்க முடியாது.

### கூட்டணி, அரசுக்கு ஆதரவு அளிப்பதாகக் கூறப்படுகிறது

"தமிழர் விடுதலைக் கூட்டணியை முதலாளித்துவக்கட்சி என்றும், ஐக்கிய தேசியக்கட்சிக்கு அது ஆதரவு வழங்கி வருகிறதென்றும் கூறப்படுகிறது இதில் எவ்வித உண்மையுமில்லை. கூட்டணி சோஷலிசப்பாதையில் சென்றுகொண்டிருக்கிறது அதனுல்தான் தேசிய எதிர்ப்புத் தினமான ஜூன் 5ந் திகதியை நாமும் இடதுசாரிகளுடன் சேர்ந்து அரசுக்கு எமது எதிர்ப்பைத் தெரிவிக்கவுள்ளோம்.

"எங்கு எவர் பாதிக்கப்பட்டாலும் அவர்களுக்காக நாம் குரல்கொடுக்கத் தவறமாட்டோம். அதேபோல் தொழிற்சங்கவாதிகளும் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்திற்கு ஆதரவு வழங்கத் தவறக்கூடாது."

இலங்கை ஆசிரியர் சங்கச் சார்பில் பேசிய திரு. எஸ். சுந்தரலிங்கம் கூறியதாவது!

"இந்த அரசின் அடக்குமுறையால் கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்கள் ஆசிரியர்களே.

"இந்த அரசு ஆட்சிக்கு வந்தபின் நாணயத்தின் மதிப்புக் குறைந்துகொண்டே செல்கிறது. அதனுல் மாதச் சம்பளம் பெறுபவர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்."

"மொழிவழித் தொழிற்சங்கங்களின் சார்பில் பேசிய திரு. தங்கவேலாயுதம் கூறியதாவது;

"தொழிற்சங்க வரலாற்றிலே 56ம் ஆண்டு வரை இலங்கையிலுள்ள சகல மொழி பேசும் மக்களும் ஒன்றுபட்டுப் போராட்டம் நடத்தினர். அதனுல்தான் அன்று நடைபெற்ற போராட்டங்கள் வெற்றிபெற்றன.

### தனிச் சிங்களச் சட்டத்தின் பின்பே...

'56 ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டபின்தான் தொழிலாளி வர்க்கம், தமிழ்த் தொழிற்சங்கம் சிங்களத் தொழிற்சங்கம் எனப் பிரிந்தது. இந்தப் பிரிவினைக்கு அரசியல் வாதிகள் மட்டும் காரணமல்ல இடதுசாரித் தொழிற்சங்கங்களும் காரணமாக இருந்தன, இடதுசாரித் தொழிற்சங்கங்கள் தமிழ் மக்களைப் புறக்கணித்துச் செயல்பட்டதனுல்தான் மொழி வழித் தொழிற்சங்கம் உற்பத்தியாகியது,

திரு கு. பரராசசிங்கம் தமது தலைமையுரையில் கூறியதாவது!

தமிழ் மக்களுக்கு இன்னல்கள் விளைவிக்கப்பட்டபோது இடதுசாரிகள் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கவில்லை. புலித்தடைச் சட்டம் பயங்கரவாதச் சட்டம் போன்று பல சட்டங்கள் தமிழ் மக்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட போதெல்லாம் இடதுசாரித் தொழிற்சங்கவாதிகள் தமிழ் மக்களுக்காக அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினர்.

தமிழ்ப் பகுதியிலுள்ள மொழிவழித் தொழிற்சங்கம் ஒரு பரந்த அளவிலான போராட்டத்தை நடத்திஞல் அதற்கு இடதுசாரித் தொழிற்சங்கக் கூட்டணி பூரண ஒத்துழைப்பை நல்கத் தவறமாட்டாது.

நவசமசமாஜக் கட்சி சார்பில் பேசிய திருநாவுக்கரசு பேசுகையில் கூறியதாவது:-

1953 ம் ஆண்டுநடைபெற்ற ஹர்த்தாலைக் கண்டு எவ்வாறு டட்லி சேனநாயக்கா பிரதமர் பதவியை விட்டு ஓடிஞரோ அதேபோல இம்மாதம் 5 ம் திகதி நடைபெற இருக்கும் போராட்டத்தினர் மூலம் இந்த நாட்டில் வேறு அரசு அமையக் கூடியதாக எமது போராட்டம் இருக்க வேண்டும். இன்றைய அரசு மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கிறது. ஆனபடியால் அரசுக்கு எதிரான சக்திகள் எல்லாம் ஒன்றுபட்டுப் போராடுவதன்மூலம் அரசை நிச்சயம் மாற்றியமைக்கமுடியும்.

ஜனதிபதி திரு. ஆர்.ஜெயவர்த்தன தமது படைபலத்தை வைத்துக் கொண்டு தொழிலாள வர்க்கப் போராட்டத்தை அடக்கிவிடலாமெனக்கனவு காண்கிருர்.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கச் சார்பில் பேசிய திரு. எஸ் பி நாதன் பேசுகையில் கூறியதாவது!

இந்த நாட்டில் உள்ள எந்தவோ அரசியல் கட்சிகள் தொழிலாள வர்க்கத்தை தமது தேவைக்காகப் பாவித்தன மக்களினதும் தொழிலாளவர்க்கத்தினதும் பிரச்சினைகளில் அக்கட்சியினர் சரியான முறையில் அணுகத் தவறியதனல் அவர்களுக்கெதிராகத் தொழிலாளர் வர்க்கம் செயல்படத் தொடங்கியது.

இந்த நாட்டிலே சரியான முறையில் செயல்பட பலம் வாய்ந்த எதிர்க்கட்சி இல்லை என்ற துணிவிலேயே ஆட்சியாளர்கள் 81ல் பொதுத் தேர்தலை நடத்த உத்தேசித்துள்ளனர்.

இம்மாதம் 5 ம் திகதி நடைபெற இருக்கும் எமது போராட்டத்தை முறியடிக்க குண்டர்களின் சக்திகளை உபயோகிக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் அவர்களுக்கு தகுந்த பாடத்தைப் போதிக்கத் தொழிலாள வர்க்கம் தவறமாட்டாது

### மகாசிவம் உரை

தமிழ் ஆசிரியர் சங்கச்சார்பில் திரு. மகாசிவம் பேசுகையில் கூறியதாவது;

இடதுசாரித் தொழிற்சங்கக் கூட்டணியில் உள்ள பலர் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்கவில்லை. அதனுல் தேசிய எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழ் ஆசிரியர் சங்கம் பங்கு பற்றுவதில்லை எனத் தீர்மானித்தது. அப்படியிருந்தும் இது ஒரு தேசிய எதிர்ப்புப் போராட்டமாக இருப்பதால் நாமும் எமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்ருேம்

கல்வியைப் பொறுத்தமட்டில் இந்த அரசு சரியான முறையில் நடக்கவில்லை. தமிழர் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு சம்பளஉயர்வு இல்லை. வடகிழக்கில்பாடசாலைகள்சுவீகரிக்கப்படுவதுடன் அவை சிங்களமயமாக்கப்பட்டு வருகின்றது

சீனக் கம்யூனிஸ்ட் கட்சிசார்பில் ஜனுப் இக்பால் பேசுகையில் சிறிய போராட்டங்களையும் பெரிய போராட்டங்களையும் நாம் செய்வதன் மூலம் தான் நாம் எமது கொள்கைகளை வளர்ப்பதுடன் அரசுக்கு எமது எதிர்ப்பைக் காட்டக் கூடியதாகவும் இருக்கும் என்ருர்.

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் சார்பில் திரு. சி. குமாரசாமி பேசுகையில், 1953ல் நடைபெற்ற போராட்டத்தின் பின் சகல மக்களும் ஒன்றுசேரும் போராட்டமாக இது இருப்பதால் நிச்சயம் இப் போராட்டம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்ருர்?

அகில இலங்கை லிகிதர் சேவைச் சங்கத்தைச் சேர்ந்த திரு. வி பொன்னம்பலம் பேசுகையில், 77-ம் ஆண்டுத் தேர்தலின் போது பொதுமக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மறந்து ஐக்கிய தேசியக்கட்சி அரசு செயல்பட்டு வருகிறது. 47-ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை நடைபெற்ற ஆட்சிகளில் மிகவும் மோசமான ஆட்சியைச் செலுத்தி வருவது இந்த அரசே என்ருர். (கொ-இ)

---

# உகண்டா மக்களுக்குப் பரதநாட்டிய மோகம்

## டெலிவிஷன் மூலம் பயிற்சி: சாவகச்சேரி நடன ஆசிரியை தகவல்

(மட்டுவில்)

உகண்டா மக்களுக்குப் பரதநாட்டியக் கலையில் பற்று ஏற்பட்டுள்ளதாம்.

இக் கலையைப் பயில்வதில் உகண்டா மக்கள் அக்கறை காட்டியுள்ளதைத் தொடர்ந்து கம்பாலாவில் உள்ள உகண்டா தொலைக் காட்சி நிறுவனம், பரதநாட்டியக் கலையைப் பயிற்றுவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது வாரத்தில் இரண்டு நாள் உகண்டா தொலைக்காட்சி நிலையம் இப் பயிற்சியை அளித்து வருகிறது.

சாவகச்சேரியைச் சேர்ந்த பரதநாட்டியமணி திருமதி வசந்தா டானியல் பரதநாட்டியக் கலையை வளர்க்கும் தொண்டில் ஈடுபட்டு உகண்டா சென்றுள்ளார். இவர் உகண்டாவில் இதுவரை சுமார் 6 பரதநாட்டிய நிகழ்ச்சிகளை மேடையேற்றியுள்ளார்.

மேடையில் பரதநாட்டிய நிகழ்ச்சியைப் பார்த்து ரசித்த உகண்டாமக்கள், அக்கலையைப் பயின்று கொள்ளப் பெரிதும் ஆர்வம் காட்டி வருகிருர்களாம்

அந்த மக்களின் கலை ஆர்வத்தை உணர்ந்தே உகண்டா தொலைக்காட்சி நிறுவனம், இக்கலையை தொலைக்காட்சி மூலம் பயிற்ற முன்வந்துள்ளது. பரதநாட்டிய உடை, ஆபரணங்கள், பொட்டு ஒப்பனை முதலியவை உகண்டா மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளதாக, திருமதி. வசந்தா டானியல் தெரிவித்தார். இவர் உகண்டாவிலுள்ள தமது ஒரு மாணவியை வைத்துக் கொண்டு, தொலைக்காட்சி மூலம் பரதநாட்டிய கலைப் பயிற்சியை நடத்திவருகிருர்.

இவர் தான்சானியா, நைரோபி, பிலிப்பைன்ஸ், பர்மா, மலேசியா, சிங்கப்பூர் முதலான இடங்களுக்கும் செல்லவுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாராளுமன்றத்தில்

# பரந்தன் தொழிற்சாலைபற்றி

## 'அமிர்' அறிக்கை சமர்ப்பிப்பார்

(பண்டத்தரிப்பு)

கடந்த வாரம் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்கு எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், வட்டுக்கோட்டைத்தொகுதி எம். பி. திரு தா. திருநாவுக்கரசு ஆகிய இருவரும் தேரில் விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரடியாகப் பார்வையிட்டனர்.

இது பற்றி வட்டுக்கோட்டைத்தொகுதி எம். பி. திரு திருநாவுக்கரசு தெரிவிக்கையில் இத் தொழிற்சாலையில் உள்ள ஐந்து முக்கிய தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளைத்தாங்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும், இத் தொழிற்சாலையின் எதிர்காலம் பற்றி அங்குள்ள தொழிலாளர்கள் பெரும் அச்சம் கொண்டிருப்பதாகவும் தொழிற்சாலையின் கட்டிடத்திருத்த வேலைகள் கடந்த பல வருடங்களாக எதுவும் செய்யப்படாது முடிந்து விழும்நிலையில் இருப்பதாகவும் கூறினார்.

பாராளுமன்றக் கூட்டத்தில் இத்தொழிற்சாலைபற்றி எதிர்க்கட்சித்தலைவர் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்து தொழிற்சாலையின் எதிர்காலம் பற்றி விபரமான விளக்கத்தை அரசிடமிருந்து கோருவர் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஒப்பந்தகாரர் வீதிவேலையை முடிக்கவில்லையாம்

(பச்சிலைப்பள்ளி)

பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் வெற்றிலைக்கேணி கட்டைக்காடு வீதி அமைக்கப்படுவதற்குப் பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இவ் வேலையின முன்னிப்பற்று கிராமாட்சி மன்றம் இரண்டு தனி பட்ட ஒப்பந்தக்காரரிடம் கேள்விப் பத்திரம் கோரி ஒப்படைத்திருந்தது இதில் ஒரு ஒப்பந்தக்காரர் இதுவரை வேலையினைச் செய்து முடிக்கவில்லையாம். இது பற்றி பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் விதிப்படி வேலையினைச் செய்துமுடிக்க நடவடிக்கை எடுக்கும் படி முள்ளிப்பற்றுக் கிராமாட்சி மன்ற விசேஷ ஆணையாளரைத் தந்தி மூலம் கேட்டுள்ளார். (அ)

## 'கிராமங்களே ஒருநாட்டின் ஆணிவேர்'

(வவனியா)

"ஒரு நாட்டின் ஆணிவேராகத் திகழ்வது கிராமங்களே இந்தக் கிராமங்கள் கட்டுக்கோப்புடனும் ஒற்றுமையுடனும் திகழ்வதற்கு அங்கு சீரான நிர்வாகம் அவசியம் சிறந்த நிர்வாகத்தினால் மட்டுமே கிராம மக்களின் அடிமட்டத்தேவைகளைச் சரியான முறையில் பூர்த்திசெய்யமுடியும். இத்தகைய கிராமங்களே இன்றைய சூழ்நிலையில் உருவாக்கக்கூடிய அடிமட்ட நிர்வாக அமைப்பே கிராம அபிவிருத்திச் சங்கங்கள்".

இவ்வாறு வவனியாதெற்கு தமிழ்ப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு ஏ. சி. நாகராசா குறிப்பிட்டார்.

கோவில் புதுக்குளத்தில் நடைபெற்ற கிராம அபிவிருத்திச் சங்கக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் "கடந்த இரண்டு மாதகாலமாக பெரும் பூசம்பமாக இயங்கிவந்த இச்சங்கம் சமாசமான முறையில்போட்டியின்றிப் புதிய நிர்வாகக் குழுவினரைத் தெரிவு செய்தது பாராட்டுக்குரியதாகும்" எனத் தெரிவித்தார்.

நடப்பாண்டு தலைவராக திரு. கே. சுந்தரலிங்கமும் இணைச்செயலாளர்களாக திரு. இ. வரதராஜன், திருமதி. கே. என். தயந்தியும் பொருளாளராக திரு. பொ. தம்பிராசாவும் தெரிவாகினர் ஆறு பேர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. (அ)

## குடிநீர்த் திட்டத்துக்கு ரூ. 2 லட்சம் ஒதுக்கீடு

(மன்னார்)

முருங்கன் கிராமத்திற்குக் குடிநீர் விநியோகத் திட்ட வேலைகளுக்கென 1,60,000 ரூபாவும், தேவன்பிட்டிக் கிராமத்திற்குக் குடிநீர் விநியோகத் திட்ட வேலைகளுக்கென 60 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக மன்னார் அரசாங்க அதிபர் திரு கமிலஸ் பெர்னாண்டோ, மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இந்த 2 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவையும் வேலைத்திட்டத்தை நடத்துவதற்காகத் தேசியக் குடிநீர் வழங்கல் சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஈ)

## உப-தபாலகம் இடமாற்றம்

(மண்டைதீவு)

மண்டைதீவு பஸ்தரிப்புநிலையத்துக்கு அண்மையில்இருந்த உபதபால் நிலையம் மண்டைதீவுக்கிராம சபை அலுவலகக் கட்டிடத்திற்கு மிக அண்மையாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (அ)

## 5ம் திகதி இவர்கள் மெதுவான வேலை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டக் கூட்டுறவு ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் இம் மாதம் 5ம் திகதி நடக்கவிருக்கும் தேசிய எதிர்ப்புப் போராட்டத்தின் போது தாங்கள் கறுப்புப் பட்டி அணிந்து மெதுவாகத் தொழில் செய்வதன் மூலம் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கப்போவதாகத் தீர்மானித்துள்ளனர். (கொஅ)

## ஞானசோதி ச. ச. நிலைய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஞானசோதி சனசமூக நிலைய 12 வது ஆண்டுப் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் ஆ. குணரத்தினம், உபதலைவர் செ சிவானந்தம், செயலாளர் சி. வேலாயுதம், உபசெயலாளர் ஆ. கருணானந்தம், பொருளாளர் ஆ. கருமகுலசிங்கம், போஷகர் துரை, 9 பேர் நிர்வாகசபை உறுப்பினர்கள்.

## ஆழியவளை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை இம்பாலைநயில் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்திருந்தார்.

கடந்த ஒரு வருட காலத்திற்குள் இப்பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட நான்கு பஸ்கள் விபத்துக்குள்ளாகி சேதமடைந்துள்ளன இவற்றில் இரண்டு அண்மையில் அனுப்பப்பட்ட புதிய பஸ்கள் ஆகும்.

தற்போது இரண்டு பஸ்களும் விபத்துக்குள்ளாகி சேதமடைந்துள்ளதால், எழுதுமட்டுவாள், பளை, தாளையடி, உடுத்துறை ஆழியவளை, முள்ளியான் பகுதி மக்கள் மீண்டும் போக்குவரத்துக் கஷ்டத்தினை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

## ஆலயமணி திருட்டு

(மன்னார்)

60 இறாத்தலுக்கு மேல் எடையுள்ள வெண்கலத்திலான ஆலயமணி முருங்கன் மெதடிஸ்த ஆலயத்தில் களவாடப்பட்டுள்ளது

ஆலயக் குருவானவர் முருங்கன் பொலிசில் புகார் செய்யப்பட்டதையடுத்து முருங்கன் பொலிசார் தீவிர புலன் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (ஈ)

## முச்சக்கரவண்டி அன்பளிப்பு

(மன்னார்)

புத்தாண்டு தினத்தையொட்டி பொதுமக்களின் ஆதரவுடன் விளையாட்டுப் போட்டிகளை நடத்திய மன்னார் பொலிசார், விளையாட்டுப் போட்டிக்கென சேகரித்த நிதியில் நோயாளரைக் கொண்டு செல்லும் முச்சக்கர தள்ளு வண்டி ஒன்றை வாங்கி மன்னார் வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்தனர். (ஈ)

## இம்மாதம் நியமனம் கிடைக்கலாம்

(மட்டுநகர்)

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 16, 17, 18ம் திகதிகளில் மட்டக்களப்பு கல்வித் திணைக்களாவில் மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் ஆகியோரின் சிபாரிசின் பேரில் நூறு பேர் உதவி ஆசிரியர்கள்நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டார்கள். இவர்களில் தெரிவான விண்ணப்பதாரிகளிடம் சான்றிதழ்கள் பெறப்பட்டன.

கல்விப் பணிப்பாளர் விடுமுறையில் சென்றமையினால் இவர்கட்கான நியமனம் வழமைபோல் உடனடியாக வழங்கப்படவில்லை கல்விச் சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில் நியமனம் வழங்குதல் திடீரென ரத்து செய்யப்பட்டது.

இவர்கள் இது குறித்து அமைச்சர்களிடம் முறைப்பாடு செய்ததையடுத்து இவர்களின் நியமனம் சம்பந்தமாக அமைச்சரவைக் [illegible] கூட்டத்தில் விசேஷ அனுமதியுடன் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படலாமெனவும் இதன் பிரகாரம் இம்மாதம் நியமனம் வழங்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## மீன்பிடிக்கச் சென்றவர் கடலுக்குப் பலியா?

(மன்னார்)

சிறுத்தோப்புப் பகுதியில் உள்ள ஆழ்கடலில் சகமீனவர்களுடன் படகில் மீன் பிடிக்கச் சென்ற ஒருவர் மாயமாய் மறைந்து விட்டார். மகேந்திரன் என்பவரே இப்படி காணாமல் போனவராவார்.

நித்திரைத் தூக்கத்தில் இவர் கடலில் விழுந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இவருடன் மீன் பிடிக்கச் சென்றவர்கள் இவரைத் தேடியும் காணவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. இவரைக் கண்டுபிடிக்க தீவிர தேடுதல் வேட்டை நடைபெறுகிறது. (ஈ)

## தனியார் குளிர்சாதனப் பெட்டிகளில் ஆஸ்பத்திரி ஊசிமருந்து?

(மண்டைதீவு)

மண்டைதீவு அரசினர் வைத்தியசாலையில் குளிர் சாதனப் பெட்டி இல்லாததால் ஊசி மருந்துகள் பாதுகாப்பாக வைக்க முடிவதில்லையாம். இதன் காரணமாக இங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தனியார் நிறுவனங்களில் இருக்கும் குளிர்சாதனப் பெட்டிகளில் ஊசி மருந்துகளைப் பாதுகாத்து வருவதாகத் தெரிகிறது இதனால் ஊசி ஏற்றும் நோயாளர்கள் பெரும் கஷ்டப்படுகிறார்கள். (அ)

மன்னார் மாவட்ட

## கல்விநிலை பற்றி அமிரிடம் கோரிக்கை

(மன்னார்)

மன்னாருக்கு விஜயம் செய்திருந்த எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மன்னார் மாவட்டச் செயலாளர் திரு எம். எஸ். லெம்பேட் தலைமையில் சென்ற மன்னார் மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் கோஷ்டி மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் இல்லத்தில் வைத்து சந்தித்து உரையாடியது

மன்னார் மாவட்டத்தில் கல்வியின் தரம் குறைந்து வருவதாகவும், தமிழ்ப்பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும், தரமான பாடசாலைகளில் தரமான ஆசிரியர்கள் இல்லையென்றும் மன்னார் கல்வி அலுவலகம் தரமுயர்த்தப்பட வேண்டுமென்றும் கோரிக்கைகள் பல அடங்கிய மகஜர் ஒன்றையும் திரு. அமிர்தலிங்கத்திடம் கையளித்தனர்.

இவை பற்றி மன்னார் எம். பி. திரு பி. எஸ். சூசைதாசனுடன் கலந்தாலோசித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதாக திரு. அமிர்தலிங்கம் உறுதியளித்தார். (ஈ)

## கர்ப்பிணி தற்கொலை

(வவனியா)

வவனியா ஒமந்தையைச் சேர்ந்த தவசிகாரியான கமலநாதன் பெண் நாகேஸ்வரி என்பவரது மரணம் தொடர்பாக விசாரணை நடைபெற்றது. இவருக்கு வயது 22.

நடுச்செட்டிகுளம் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு செல்லையா பத்மநாதன் முன்னிலையில் இறந்தவரது தாய் மயில்வாகனம் பாக்கியம், கணவன் அமலானந்தம் கமலநாதன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

"எங்கள் இருவருக்கும் இடையே ஏழு மாதங்களாகக் குடும்பப் பிரச்சினைகள் தொடர்பாக வாக்குவாதங்கள் நடப்பது வழக்கம். எங்களின் மூன்று பிள்ளைகளையும் எனது தாய்வீட்டில் சாவகச்சேரியைச் சேர்ந்த நுணாவிலில் அழைத்துச்சென்று விட்டிருந்தேன் எனது மனைவியும் என்னுடன் கோபித்துக்கொண்டு அவரது தாயுடன் வசித்து வந்தார்" இவ்வாறு அமலானந்தம் கமலநாதன் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்

பிரேத பரிசோதனை நடத்திய வவனியா ஆஸ்பத்திரி மாவட்ட அதிகாரி சாட்சியமளிக்கையில், "இறந்தவரது உடலின் உள்ளேயும் வெளியேயும் எவ்வித மான காயங்களுமில்லை இறந்தபோது இவர் ஐந்து மாதக் கர்ப்பிணியாக இருந்தார் கிருமிநாசினி அருந்தியதாலேயே மரணம் ஏற்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார்.

தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)

## இன்று கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உண்ணாமலை கன்னாட்டி கனகம்மாள் ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது

காலை 9 மணிக்கு அட்டோத்திர சங்காபிஷேகமும் இரவு அலங்கரிக்கப்பட்ட தண்டிகையில் அம்பாள் வீதியுலா வருதலும் இடம் பெறும். (கொஅ)

## சுவீகரித்த காணிகளைப் பகிர்ந்தளிக்கக் கோரிக்கை

(பச்சிலைப்பள்ளி)

பளைப் பகுதியில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்ட காணிகளைப் பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிக்குமாறு புலோப்பளைக் கிராம அபிவிருத்திச் சங்கம், யாழ். அரசாங்க அதிபரும், யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளருமான திரு. யோகேந்திரா துரைசுவாமியை பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்துக் கேட்டுக்கொண்டது.

அரசாங்க அதிபர் இசற்குப் பதிலளிக்கையில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழு அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகக் கூறினார். (அ)

## இடமாற்றம்

(மண்டைதீவு)

ஊர்காவற்றுறை பெருந்தெருக்கள் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. எஸ். சுந்தரலிங்கம் இம்மாதம் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்றுச்செல்கிறார்.

இவரது இடத்திற்கு மன்னார் மாவட்ட பெரும் தெருக்கள் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. க. பத்மநாதன் இடம் மாற்றம் பெற்று வருகிறார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2லட்சம்ரூபாய் செலவிலான கட்டிடம் 15நாளில்முடிவுறும்

## நிருபர்கள் மகாநாட்டில் யாழ். அரச அதிபர் துரைசுவாமி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

சுமார் 2 லட்சம் ரூபா செலவில் புங்குடுதீவில் 120 அடி நீளமும் 120 அடி அகலமும் கொண்ட நுண்கலைப் பயிற்சி நிலையத்தை 15 நாட்களுக்குள் பூர்த்தி செய்ய அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி திட்டம் வகுத்துள்ளார்.

இத்தகவலை, நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில், திரு. யோகேந்திரா துரைசுவாமி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இக் கட்டடத்திற்கான அடிக்கல்லை அரசாங்க அதிபர் நாட்டி வைத்தார். இம்மாதம் 19ம் தேதி அமைச்சர் திரு தொண்டமான் இக் கட்டிடத்தை திறந்து வைப்பார்.

இந்த நுண்கலை நெசவு நிலையத்தை நிறுவ வேண்டுமென்று வேறு எவராவது முன்பு கோரினார்களா? என நிருபர் ஒருவர் கேட்டபோது அப்படி யாரும் கோரவில்லை என்றும், நானே அமைச்சர் தொண்டமானுடன் தொடர்பு கொண்டு இதை நிறுவியதாகவும் அரசாங்க அதிபர் கூறினார்.

ஆடுவளர்க்கும் திட்டமொன்றும் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் திரு தொண்டமான் 20 ஆடுகள் வழங்கவிருப்பதாகவும் ஆடுகள் வளர்ப்போருக்கு கடனுதவி வழங்கப்படுமென்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

கொழும்புத்துறை அரியாலை திருநெல்வேலி, கொக்குவில் கோண்டாவில், ஆகிய பகுதிகளில், ஆடுவளர்க்கும் திட்டம் ஆரம்பிக்கப்படுமென்றும் அவர் மேலும் கூறினார்.

### புங்குடுதீவு மக்கள் கெட்டிக்காரர்கள்

நிருபர்: புங்குடுதீவு நுண்கலை நெசவு நிலையத்தை 15 நாட்களில் கட்டிமுடித்துவிடுவார்களா?

அரசாங்க அதிபர்: புங்குடுதீவு மக்கள் கெட்டிக்காரர்கள் குறித்த தவணையில் முடித்து விடுவார்கள். இரவு பகலாக வேலை நடக்கிறது.

நிருபர்: யாழ்ப்பாணம் புல்லுக்குளம் திட்டம் என்ன நிலையில் இருக்கிறது?

அரசாங்க அதிபர்: யாழ். நகரமுதல்வருடன் ஆலோசித்து இத் திட்டத்தை வகுத்தேன்.

நகரமுதல்வர் 5 லட்சமும் நான் 3 லட்சமும் கொடுப்பதாக இத்திட்டம் இருந்தது. பின்னர் சில மாற்றங்கள் ஏற்பட இருந்தது. இதுபற்றி மாநகரசபையில் ஒரு தீர்மானம் வந்துள்ளது. ஆனால் அத் தீர்மானம் எனக்கு இன்னும் கிடைக்கவில்லை.

நிருபர்: திருநெல்வேலி பால் சேகரிப்பு நிலையம்பற்றி விளக்குவீர்களா?

### இன்று வரும் இயந்திரம் 4000 பைந்து பால் பாதுகாக்கும்

திட்டமிடல் பணிப்பாளர் திரு. சிவதாசன் இதுபற்றி கூறியதாவது:

இந்தப் பால் சேகரிப்பு நிலையத்திற்கு மார்ச் 3ம் திகதி அரசாங்க அதிபர் அடிக்கல் நாட்டினார். சுமார் 2 லட்சம் ரூபா செலவில் இந்நிலையம் கட்டப்பட்டுள்ளது. 4000 பைந்து பாலை சேகரித்து வைக்கும் யந்திரம் நாளை வரவிருக்கிறது.

நீர்வளசபையின் சம்பட்டிகுளக்கரையில் தண்ணீர்த்தொட்டியொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுற்றுப்புறத்திலுள்ளவர்களுக்கும், குடிநீர் வசதி வழங்கப்படும்.

### முழுப்பாலும் இங்கேயே வழங்கப்படும்

நிருபர்; இப்பால் சேகரிப்பு நிலையத்தில் என்ன செய்யப்படும்?

திரு சிவதாசன்: பால் சேகரிக்கப்படும் பாலை பதப்படுத்தப்படும் யூனிட் அமைக்கப்படும். 7 மாதத்திற்கு முன் அமைச்சர் தொண்டமான் கிளிநொச்சியில் பால் சேகரிப்பு நிலையத்தை ஆரம்பித்து வைத்தார். அந்தப்பால் வவுனியா ஊடாகப் பொலநறுவைக்குப் போகிறது. இந்தப் பால் இனிமேல் திருநெல்வேலிக்குக் கொண்டு வரப்பட்டு, யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்படும். முழுப்பாலையும் யாழ்ப்பாணத்திற்கு வழங்குமாறு அரசாங்க அதிபர் கேட்டிருக்கிறார்.

நிருபர்: திருநெல்வேலியில பால்சேகரிப்பு நிலையம் நிறுவ வேண்டுமெனப் பாராளுமன்ற உறுப்பினர் எவராவது கேட்டிருக்கிறார்களா?

அரசாங்க அதிபர் எம். பி.க்கள் எவரும் கேட்கவில்லை யாழ்ப்பாண மக்களின் நன்மை கருதி அமைச்சரிடம் இதைக் கேட்டேன். யாழ்ப்பாணத்திற்கு கிளிநொச்சியிலிருந்து இனிமேல் 7000 பைந்து பால் வரும். யாழ்ப்பாணத்திலும் பால் சேகரிக்கலாம் உற்பத்தியாளருக்குக் கூடிய விலை வழங்கப்படும். பாவனையாளருக்கு நியாயமான விலையில் பால் வழங்கப்படும்.

நல்லூர்த் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுத் தலைவர் திரு. சர்வேஸ்வரன் கூறியதாவது: மற்ற இடங்களைப் போல் தேசிய பால்சபை யாழ்ப்பாணத்தில் பால் வழங்கவில்லை, கூட்டுறவுச் சபைகளே இங்கு பால் வழங்குகின்றன. யாழ். வைமன் வீதியிலுள்ள கூட்டுறவுச் சபை பால் வழங்கியது. 76ம் ஆண்டுக்குப் பின நல்லூர்த் தொகுதியில் நிறுவப்பட்ட பால்சபை, நல்லூர்த்தொகுதியில் பால் சேகரித்து விநியோகித்து வருகிறது ஒரு நாளைக்கு 5,000 பைந்து பால் சேகரிக்கிறது ஒரு பாற்பண்ணையும் உண்டு.

யாழ்ப்பாணத்திலே பாலைச் சேகரித்துச் சுளிரூட்டப்பட்ட பாலைப் பாவனையாளருக்கு நியாயமான விலையில் கொடுப்பதுதான் எங்கள் திட்டம்.

ஜூன் 1ம் தேதி முதல் விட்டர் முறையில்தான் பால் வழங்கி வருகிறோம். பால் சேகரிப்புநிலைய உபகரணங்களுக்கு 4 லட்சம் ரூபாவுக்கு மேல் செலவாகும் யாழ். மாநகரசபை எல்லைக்குள்ளும், திருநெல்வேலியிலும், பால் வழங்கப்படும் ஒவ்வொரு பாவனையாளர்களுக்கும் நாளடைவில் வீடுவீடாகப் பால் வழங்கப்படும்

நிருபர்: தேங்காய்ப்பால் கலக்கப்பட்டால், பாலில் கலப்படம் கண்டுபிடிக்க முடியாது. இதற்கு என்ன செய்யலாம்?

அரசாங்க அதிபர்:- எங்கள் பால் அப்படியிருக்காது.

"யாழ். அரசாங்க அதிபரை

# நிருபர்கள் சந்திப்பது பெரும் கஷ்டமாகவுள்ளது"

நிருபர்: பத்திரிகையாளர் மாநாட்டிற்கு, நிருபர்களுக்கு ஒரு நாள் முன் கூட்டிய அழைப்புக் கிடைக்கவில்லை, கஷ்டமாக இருக்கிறது இதற்கு என்ன செய்ய வேண்டும்

அரசாங்க அதிபர்:- இம் மாநாடு அவசரமாகக் கூட வேண்டியிருந்தது. அமைச்சர்களின் வருகை பற்றி நேற்றுக் காலை தகவல் கிடைத்ததும், மாநாட்டை உடன் கூட்டத் தீர்மானித்தோம். நிருபர்களுக்கு நேற்றுக்காலை தொலைபேசியில் அறிவித்தோம்.

நிருபர்:- எங்களுக்கு நேற்றுமாலைதான் தொலைபேசி அழைப்புக் கிடைத்தது. எங்களுக்குப் பல நிகழ்ச்சிகள் உண்டு கடைசி நேரத்தில் அழைப்புக் கிடைப்பதால் கஷ்டமாக இருக்கிறது. இன்று பருத்தித்துறைக்கு முக்கிய வழக்கு ஒன்றுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது.

அரசாங்க அதிபர்; நிருபர்களுக்கு முதல் நாள் காலையில் அறிவித்துவிட்டோம்

நிருபர்: நிருபர்களுக்கு உத்தியோக பூர்வமான அழைப்பு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். யாழ். மாநகரசபையில் அப்படித்தான் செய்கின்றனர். அழைப்பில்லாமல் இங்கு வந்தால், உள்ளே வரத் தடை செய்கிறார்கள்.

நிருபர் நிம்மாவட்ட அபிவிருத்தி பற்றி சில இலாகாத் தலைவர்களுடன் தொடர்புகொண்டபோது அவர்கள் செய்திகள் தரப் பயப்படுகிறார்கள். தங்களிடம் கேட்கும்படி கூறுகிறார்கள். செய்திகள் கொடுக்கக்கூடாதென்ற ஏதாவது தடை இருக்கிறதா?

அரசாங்க அதிபர்: என்னுடன் தொடர்புகொள்ளமுடியாவிட்டால், பொதுசனத்தொடர்பு அதிகாரி, திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் போன்றவர்களுடன் தொடர்புகொள்ளலாம்

நிரு: சில முக்கிய விஷயமாகத் தங்களை சந்திக்க வந்தால் கதவை மூடிவிடுகிறார்கள். நிருபர்களுக்குச் சந்திக்க அனுமதி கிடைப்பதில்லை. தொலைபேசியில் தொடர்பு கொண்டாலும் தங்களுடன் தொடர்புகொள்ள முடியவில்லை இடையில் சிலர் குறுக்கிட்டுத் தடுக்கிறார்கள். ஆதலால் எந்த முக்கியமான விடயம் பற்றியும் தங்களுடன் தொடர்பு கொள்ள முடியாமலிருக்கிறது கச்சேரியில் நடக்கும் மாநாடுகளுக்கு வந்தால் கதவடைக்கிறார்கள். இப்படியானால் யாழ் மாவட்ட அபிவிருத்தி பற்றி மக்களுக்கு எப்படி எடுத்துக்கூற முடியும். இதற்கு ஏதாவது வழிசெய்யுங்கள். (க-ஜ)

# அண்ணவின் கொள்கைகளுக்கு கிடைத்துள்ள பெருவெற்றி

## எம். ஜி. ஆர். பெருமிதம்

(சென்னை)

தமிழக சட்டசபைத் தேர்தலில் அ. தி. மு. க. வுக்குக் கிடைத்த பெருவெற்றி அண்ணாவின் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாகும்

இவ்வாறு அ. தி. மு. க. தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தமிழக வானொலிக்கு அளித்த பேட்டியில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

அ. தி. மு. க. புதிய அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இம்மியளவும் தயங்கமாட்டாது.

எதிர்க்கட்சிகள் காழ்ப்புணர்ச்சியின்றி எமது அரசுடன் ஒத்துழைக்கவேண்டும்.

எதிர்க்கட்சிகளை மதித்து அவர்களது கருத்துக்களையும் கவனத்துக்கெடுத்துக் கொள்வோம் எனவும் உறுதிஅளிக்கிறேன்.

நாம் தேர்தலில் பெருவெற்றியடைந்தாலும் எதிர்க்கட்சிகள் எம்முடன் ஒத்துழைக்கவேண்டும். வன்முறைகளில் ஈடுபடாது நல்லாட்சி நடக்க ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் திரு. இராமச்சந்திரன் கூறினார். (இ)



## தமிழக சட்டசபையில் 151 புதுமுகங்கள்

### ஐவர் பெண்கள்

(சென்னை)

தமிழக சட்டசபையில் இம்முறை 151 பேர் புதியமுகங்கள்

### 84பேர் பழையவர்கள்

இம்முறை தேர்தலில் 146 முன்னாள் உறுப்பினர்கள் போட்டியிட்டு 84 பேர் மட்டுமே வெற்றிபெற்றனர்

கலைக்கப்பட்ட சட்டசபையின் அ தி மு க உறுப்பினர்கள் 60 பேர் இத்தேர்தலில் போட்டியிட்டதில் 44 பேர் வெற்றிபெற்றனர். தி மு க சார்பில் போட்டியிட்ட 36 மாஜி உறுப்பினர்களில் 20 பேரும் இந்திரா காங்கிரசைச் சேர்ந்த 18 பேரில் அறுவரும், மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் 9 பேரில் எழுவரும் இந்திய கம்யூனிஸ்ட் 5 பேரில் நால்வரும் ஜனதா 4 பேரில் ஒருவரும் வெற்றிபெற்றனர்.

### 5 பெண் உறுப்பினர்கள்

புதிய சட்டசபையில் ஐந்து பெண் உறுப்பினர்கள் உள்ளனர். 16 பெண்கள் போட்டியிட்டனர்.

திருமதி கோமதி (வலங்கைமான் அ தி மு க) செல்விவிஜயலக்ஷ்மி (வீரபாண்டி- அதிமுக) திருமதி ஏ. பொன்னம்மாள் (நிலக்கோட்டை தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ்), திருமதி ராஜாம்மாள் வைகாபுரி (தலைவாசல்- இ'காங்) திருமதி டி. யசோதா ஸ்ரீபெரும்புதூர்- இ. காங்) ஆகிய ஐவருமே புதிய உறுப்பினர்கள் கலைக்கப்பட்ட சட்ட சபையில் இரு பெண்களே இருந்தனர். (இ)

# கடும் போட்டிக்கு மத்தியில் கருணாநிதி வெற்றி

(சென்னை)

அண்ணாநகர் தொகுதியில் போட்டியிட்ட தி. மு. க தலைவரான திரு. மு. கருணாநிதி, அ தி மு க வேட்பாளர் டாக்டர் எச் வி ஹண்டேயை கடும்போட்டிக்கு மத்தியில் 699 வாக்குகளால் வெற்றிபெற்றார்.

வாக்குகள் எண்ணிக்கையில் [illegible] மீண்டும் எண்ணும்படி வாக்குகள் எண்ண வேண்டுமென்ற டாக்டர் ஹண்டே யின் கோரிக்கை தேர்தல் அதிகாரியினால் நிராகரிக்கப்பட்டது

அண்ணாநகர் தொகுதி வாக்குவபரம் வருமாறு:

| | |
|---|---|
| மு. கருணாநிதி (தி மு க) | 51, 290 |
| எச் வி ஹண்டே (அ. தி மு க) | 50,591 |
| நெல்லை ஜெபமணி (ஜனதா) | 2,335 |
| மேலதிகம் | 699 |

(இ)

## எம். ஜி. ஆருக்கு 59.61 சதவீத வாக்குகள்

(சென்னை)

தமிழகத் தேர்தலில் மதுரை மேற்குத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றியீட்டிய திரு. எம் ஜி இராமச்சந்திரனுக்கு அத்தொகுதியில் 59.61 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளன.

கடந்த 77-ம் ஆண்டுத் தேர்தலில் அருப்புக்கோட்டையில் போட்டியிட்ட திரு. இராமச்சந்திரன் 56 1 சதவீத வாக்குகளைப் பெற்றார்.

## அ.தி.மு.க, கூட்டணிக்கு 92,92, 762 வாக்குகள்

(சென்னை)

162 ஸ்தானங்களைக் கைப்பற்றிய அ. தி மு க. தலைமையிலானகூட்டணிக்கு 92லட்சத்து 92 ஆயிரத்து 162 வாக்குகளும் (49 12 வீதம் 60 தொகுதிகளைக் கைப்பற்றிய இந்திரா காங்கிரஸ் கூட்டணிக்கு 83 லட்சத்து 85ஆயிரத்து 989 வாக்குகளும் (44 47 வீதம்) கிடைத்தன. (இ)

## பிரசவத்தாய்மார் கஷ்டம்

(மண்டைதீவு)

மண்டைதீவு அரசினர் வைத்தியசாலையிலுள்ள பிரசவ வார்ட்டில் குடிநீர் வசதி இல்லாமல். இதனால் இங்கு அனுமதிக்கப்படும் கர்ப்பிணிகள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். (நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கருணாநிதி மீதான ஊழல் வழக்கு தொடர்ந்து விசாரிக்கப்படும்

## எம். ஜி. ஆர். நம்பிக்கை தெரிவிக்கிறார்

(சென்னை)

தமிழ்நாட்டில் தி மு க அரசு பதவியிலிருந்தபோது தி மு க தலைவரும் அன்றைய முதலமைச்சருமான திரு. மு. கருணாநிதி மேற்கொண்டதாகக் கூறப்படும் ஊழல், மோசடி தொடர்பாக மத்திய புலனாய்வுத்துறையினர் திரு. கருணாநிதிக்கு எதிராகத் தாக்கல் செய்திருந்த வழக்குகள் தொடர்ந்து விசாரணை செய்யப்படும் எனத் தாம் நம்புவதாக அ தி மு க தலைவர் திரு எம் ஜி இராமச்சந்திரன் தெரிவித்தார்.

பத்திரிகை நிருபர்கள் மத்தியில் திரு எம் ஜி ஆர் நேற்று பேசினார்.

கருணாநிதிக்கு எதிரான வீராணம்திட்டம் உட்பட சகல ஊழல் குற்றச்சாட்டுகள் மீதும் சர்க்காரியா கமிஷன் விசாரணையின் அடிப்படையில் விசாரணை நடைபெறும் என எதிர்பார்ப்பதாகவும் திரு இராமச்சந்திரன் கூறினார்.

### நடிப்பதற்கு நேரமில்லை

திரைப்படங்களில் மீண்டும் நடிக்க திட்டமிட்டிருந்தேன். ஆனால் நேரமின்மை காரணமாக இனிமேல் படங்களில் நடிக்கமுடியாது என்றும் திரு இராமச்சந்திரன் கூறினார். (

## 544 பேர் கட்டுப்பணம் இழந்தனர்

(சென்னை)

தமிழகத்தேர்தலில் போட்டியிட்ட 1029 வேட்பாளர்களில் 544 பேர் தமது கட்டுப்பணத்தை இழந்தனர்.

சுயேச்சையாகப் போட்டியிட்ட 442 பேரும் ஜனதாக் கட்சியின் 85 பேரும் பாரதிய ஜனதாகட்சியின் 10 பேரும் ஜனதா (ராஜ்நாராயன்)வின் 4 பேரும் கட்டுப்பணம் இழந்தனர். அ.தி.மு.க., அர்ஸ் காங், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த தலா ஒவ்வொருவரும் கட்டுப்பணம் இழந்தனர். (இ)

# ஏழு மாநிலங்களில் இந்திரா ஆட்சி

## பீகாரிலும் முன்னணி

புதுடில்லி, ஜூன் 3

சட்டசபைத் தேர்தல்கள் நடைபெற்ற ஒன்பது இந்திய மாநிலங்களில் தமிழகம் தவிர்ந்த ஏனைய எட்டு மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் அமோக வெற்றியீட்டியுள்ளது.

மத்திய பிரதேசம், குஜராத், ஒரிஸா ஆகிய மாநிலங்களில் இந்திராகாங்கிரஸ் நான்கில் மூன்று பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுள்ளது. அதேவேளையில் ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம் ஆகிய இரு மாநிலங்களில் இந்திராகாங்கிரஸ் கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைத்துள்ளது.

மகாராஷ்டிரம் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் இக்கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மைப்பலம் கிடைத்துள்ளது. மகாராஷ்டிரத்தில் இந்திராகாங்கிரஸ் கட்சி மூன்றில் இரண்டு பலம்பெறுவதற்கு 7 இடங்கள் குறைவாக இருக்கிறது.

பீகாரில் அமோக வெற்றியீட்டியுள்ள இந்திராகாங்கிரஸ் அறுதிப்பெரும்பான்மைப்பலத்தைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# எஸ். எஸ். ஆருக்கே கூடுதல் மேலதிக வாக்குகள்

(சென்னை)

தமிழக சட்டசபைத் தேர்தலில் மதுரை ஆண்டிப்பட்டி தொகுதியில் அ. தி மு க சார்பில் போட்டியிட்ட நடிகர் எஸ் எஸ் ராஜேந்திரனுக்கே கூடுதல் மேலதிக வாக்குகள் கிடைத்துள்ளன.

இவருக்குக் கிடைத்த மேலதிக வாக்குகள் 27932 ஆகும்.

### அதிக வாக்குகள்

முன்னாள் அ தி மு க போக்குவரத்து அமைச்சர் திரு. சி. பொன்னையனுக்கே அதிக வாக்குகள் கிடைத்தன.

திருச்செங்கோடு தொகுதியில் அ தி மு க சார்பில் போட்டியிட்ட அவர் 69,122 வாக்குகள் கிடைத்தன. (இ)

# தமிழக மக்களின் தீர்ப்பை அடக்கத்துடன் ஏற்போம்

## இந்திரா காங். சுப்பிரமணியம் கருத்து

(சென்னை)

தமிழக தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை மிகுந்த அடக்கத்துடன் ஏற்போம்.

இவ்வாறு தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

சட்டப்பேரவை கலைப்பும் விலைவாசிப் பிரச்னையும் தான் தேர்தல் முடிவுகள் இவ்வாறு அமைந்ததற்குக் காரணம் என்று நான் கருதவில்லை. கலைக்கப்பட்ட பல வடக்கு மாநிலங்களில் காங்கிரஸ் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

சட்டப்பேரவையில் இந்திராகாங்கிரஸ்கட்சி கண்மூடித்தனமான எதிர்க்கட்சியாக செயல்படாது

மத்திய அரசின்கொள்கைகளையும் திட்டங்களையும் நிறைவேற்ற அ தி.மு க. புதிய அரசு ஒத்துழைப்புக்கு அழைத்தால் இந்திராகாங்கிரஸ் அரசு அதனைப் பாராட்டும். (இ)

## காம்ப்டேவிட் உடன்படிக்கை

# ஐ. நா. தீர்மானம் திருத்தப்பட்டால் ஒப்பந்தமே ரத்தாகும்

## இஸ்ரேல் எச்சரிக்கை

ஜெருஸலம், ஜூன் 3

'காம்ப்டேவிட்' ஒப்பந்த அடிப்படையிலான ஐ நா. தீர்மானம் திருத்தப்பட்டால் அந்த ஒப்பந்தத்தையே இஸ்ரேல் ரத்துச்செய்துவிடும் என்று இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைகளை வழங்க 'காம்டேவிட்' ஒப்பந்தம் தொடர்பான ஐ நா. தீர்மானத்தை திருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக பல ஐரோப்பிய நாடுகள் பகிரங்கமாகக் கூறிவருவது குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

பாலஸ்தீன விவகாரம் குறித்து ஐரோப்பிய நாடுகளின் சமரசத்திட்டம் இஸ்ரேல் ஒரு நாடாக இருப்பதற்கே ஆபத்தாக முடியும் என்றும்—

ஜெருஸலம் முழுவதையும் இஸ்ரேலின் நிரந்தர தலைநகராக்கும் திட்டத்தை இஸ்ரேல் ஒருபோதும் கைவிடமாட்டாது என்றும் திரு. பெகின் கூறினார். (இ)

# பக்தவத்சலம் நன்றி

(சென்னை)

தமிழகத்தேர்தல் முடிவுகள் இந்திய ஜனநாயகத்தின் சிறப்பையும், பாராளுமன்ற ஜனநாயகமுறையில் வாக்குரிமைகளைப் பயன்படுத்த இந்திய மக்கள் எவ்வளவு தகுதியானவர்கள் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வாறு முன்னாள் தமிழக முதல்வர் திரு எம். பக்தவத்சலம் நிருபர்களிடம் கூறினார்.

அ. தி. மு. க. வெற்றிக்குக் காரணமாக இருந்த திரு. எம். ஜி. இராமச்சந்திரனுக்கும் திரு. பக்தவத்சலம் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். (இ)

## தமிழக சட்டசபையை

# இந்திராகலைத்தது தவறுஎன தேர்தல் நிலைநாட்டிவிட்டது

## நெடுமாறன் கருத்து

(சென்னை)

"திருமதி இந்திராகாந்திதமிழகத்தில் எம். ஜி. ஆரின் அரசைக் கலைத்ததுதவறு என்பதை தேர்தல் முடிவுகள் நிலைநாட்டிவிட்டது."

இவ்வாறு தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. பி நெடுமாறன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்:

மாபெரும் வெற்றிக்குத் தலைமைவகித்துச் சென்ற திரு. எம்.ஜி. ஆருக்கும் அவரது தோழமைக்கட்சிகளுக்கும் அவர்களுக்கு வாக்களித்த பொதுமக்களுக்கும் தமது கட்சியின் சார்பில் நன்றி தெரிவிப்பதாக அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். [இ]

## டியாகோகார்ஸியாவில் இராணுவதளம்

# அமெ. - பிரி. பாதுகாப்பு அமைச்சர்கள் பேச்சு!

லண்டன், ஜூன் 3

இந்துசமுத்திரத்தில் உள்ள டியாகோகார்ஸியா தீவை ஒரு பெரிய இராணுவத்தளமாக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது

இவ் விவகாரம் குறித்து நேற்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. ஹரோல்ட் பிரௌன் லண்டனில் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் திரு. பிரான்சிஸ் பிம்முடன் பேச்சு நடத்தினார். (இ)

## ரஷ்ய கப்பல்களுக்கு

# ஈரான் துறைகளில் அதிக வசதி

தெஹ்ரான், ஜூன் 3

ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் ஈரானிய துறைமுகங்களில் சோவியத் கப்பல்களுக்கு அதிக வசதிகளைச் செய்து கொடுப்பதென்று ஈரான் தீர்மானித்துள்ளது.

## ஈரானில் அமெ. குற்றச் செயல்

# சர்வதேச மகாநாடு ஆராய்கிறது

## தடையை மீறி யு. எஸ். குழு பங்குபற்றுகிறது

தெஹ்ரான் ஜூன் 3

ஈரானில் அமெரிக்கா மேற்கொண்டதாகக் கூறப்படும் குற்றச்செயல்கள் பற்றி ஆராய்வதற்கான சர்வதேச மகாநாடு ஒன்று தெஹ்ரானில் ஆரம்பமாகியுள்ளது

அமெரிக்காவின் முன்னாள் சட்டமா அதிபர் திரு. ரம்சே கிளார்க் தலைமையிலான குழு ஒன்றும் இம்மகாநாட்டில் கலந்துகொள்கிறது.

ஈரானுக்கு அமெரிக்கர்கள் எவரும் விஜயம் செய்யக்கூடாது என அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் விதித்த தடைஉத்தரவையும் மீறி இக் குழு மேற்படி மகாநாட்டில் கலந்துகொள்வது குறிப்பிடத்தக்கது.

மேற்படி சர்வதேச மகாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஈரானிய ஜனாதிபதி பானி சதார் கூறியதாவது:

வல்லரசுகளின் ஆதிக்கத்திலிருந்து விலகி நடக்க உறுதி பூண்டுள்ளது.

ஈரானின் பாதுகாப்பு எமது சுயமுயற்சியிலேயே தங்கியுள்ளது. எனவே எமது பாதுகாப்பை நாமே திட்டமிடத் தீர்மானித்துள்ளோம். (இ)

# காபூலில் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு

காபூல், ஜூன் 3

ஆப்கானிஸ்தானில் சோவியத் தலையீட்டை எதிர்த்து ஆப்கான் மாணவர்களும், வர்த்தகர்களும் இவ்வார இறுதியில் காபூலில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றைச் செய்யத் தீர்மானித்துள்ளனர்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறஇருக்கும் ஆர்ப்பாட்டத்திற்கு காபூலில் உள்ள சகல ... வியாபாரிகளும் ஆதரவளிப்பு தெரிவித்துள்ளனர். (இ)

மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF
குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் பைக்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு
"மேற்கு ஜெர்மனி 'BASF'"
தயாரிப்பாகும்.



குமுலுஸ் எஸ
500 கிராம் ரூபா 11/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

M LIMITED மக்வூட்ஸ் ஸ்தாபனம்
297, யூனியன் பிளேஸ். கொழும்பு 2.
தொலைபேசி: 32941–5

METROPOLITAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கான
விஞ்ஞானப்பயிற்சி
6-ஆம் வகுப்பு
புதிய விஞ்ஞான வினாவிடை 4-75
7-ஆம் வகுப்பு
புதிய விஞ்ஞான வினாவிடை அச்சில்
8-ஆம் வகுப்பு
புதிய விஞ்ஞான வினாவிடை 5-90
9 ஆம் வகுப்பு
புதிய விஞ்ஞான வினாவிடை 5-50
அரிவரி வண்ணத்தமிழ்
(கலர் படங்களுடன்) 2-00
காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு The EELANAADU 50 சதம்

## மின்வெட்டு நேரம் குறையும்

[கொழும்பு] பகலில் அமுலிலிருக்கும் மின்வெட்டு நேரம் இன்று 5 மணித்தியாலத்திலிருந்து 3 மணித்தியாலமாகக் குறைக்கப்பட்டுள்ளது. காலையில் அரைமணி நேரமும், மாலையில் இரண்டரை மணிநேரமும் மின்வெட்டு குறைக்கப்படும். [வெ]

## தமிழகத்தில் 1,97,10,116 வாக்குகள் பதிவாயின

[சென்னை] தமிழகத்தின் மொத்தம் 2 கோடியே 91 லட்சத்து 96 ஆயிரத்து 637 வாக்குகளில் 1கோடியே 97 லட்சத்து 10 ஆயிரத்து 116 வாக்குகள் பட்டுமே பதிசெய்யப்பட்டுள்ளன.

இவற்றில் 52 லட்சத்து 56 ஆயிரத்து 80 வாக்குகள் செல்லுபடியற்றதாகும். [இ]

## மேஜர் சுந்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நாடகக் குழுவினர் கடந்த மாதம் கொழும்பில் நாடக விழாவை நடாத்தி மாபெரும் வருவாய் பெற்றதுடன் ரசிகர்களின் பாராட்டையும் பெற்றனர்.

தமிழ்த் திரையுலகின் பிரபல குணச்சித்திர நடிகரான மேஜர் சுந்தரராஜன் கோஷ்டியினர் கடந்த 30-ந் திகதி முதல் யாழ் திறந்த வெளி அரங்கில் முகாமிட்டு ஞான ஒளி, ஊமையன் சேகர், டில்லி மாப்பிள்ளை, கல்யாணி ஆகிய நாடகங்களை மேடையேற்றி நாடக ரசிகர்களின் பாராட்டைப் பெற்றனர்.

தமிழ்நாட்டில் பாரசட்டும் பரிசும் பெற்ற நாடகமான கல்யாணி கொழும்பிலும் பலராலும் பாராட்டப்பட்டது. அந்த நாடகம் யாழ்ப்பாணத்திலும் பாராட்டுப் பெற்றது.

"அவன் பார்த்துப்பான்" என்னும் நாடகம் இன்று நடைபெறுகிறது.

யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் இன்றைய நாடகம் நடைபெறும். வடபிராந்திய உதவிப் பொலிஸ்மா அதிபர் திரு. பி. மகேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார்.

## தமிழ்த் தொழி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அரசாங்கம் சமத்துவம், சமதர்மம், இன ஒற்றுமை என்றெல்லாம் பேசுவது ஏமாற்று வித்தையாகும்.

"அரைகுறை தமிழ்மொழி உரிமையை தருவதாகக் கூறும் தனது அரசியலமைப்பில் உறுப்புரைகளைக்கூட இந்த அரசாங்கம் நடைமுறைப்படுத்தாமல் ஏமாற்றி வருகிறது.

தொழில் வழங்குவதில் தமிழர்கள் முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள்.

இதனாலே இந்த அரசாங்கத்தில் வேதனையும், வெறுப்பும் கொண்டுள்ள தமிழ்மக்களும் தமிழ்த் தொழிலாளர்களும் தங்கள் குமுறலையும், கொதிப்பையும் காட்டத்தக்க முறையால் அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கு கொள்ளுதல் இன்றியமையாதது." (ம-கு)

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நாடக விழா இன்று நடைபெறும் 'அவன் பார்த்துப் பான்' நாடகத்துடன் முடிவடைகிறது.

மீண்டும் இவர்களது நாடகங்கள் 6-ந் திகதியிலிருந்து கொழும்பில் நடைபெறவிருக்கிறது. (கு)

## கறுப்புப்பட்டி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கோள் விடுத்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்மக்களையும், சிங்கள மக்களையும் குறிப்பாகத் தொழிலாளவர்க்கத்தையும் அடக்கி ஒடுக்கி வெளிநாட்டு முதலாளி வர்க்கத்தினர் சுரண்ட இடமளிக்கும் சட்டங்களை ஆக்கும் அரசைக் கண்டித்துத் தொழிற் சங்கங்கள் நடாத்தும் போராட்டத்தை ஆதரித்தும், மறைமுகமாகவும், நேரடியாகவும் பேரினவாதத்தையும் இனவெறியையும் வளர்த்து இனசங்காரத்திற்குத் தூட்டமிட்டும், இராணுவத்தைக்கட்டவிழ்த்து பயங்கரவாதம் மூலம் தமிழ் இனத்தை அடக்குவதைக் கண்டித்தும், திட்டமிட்ட குடியேற்றம் மூலமும் தூண்டிவிடப்படும் கள்ளக்குடியேற்றம் மூலமும் மாகாண எல்லைகளை மாற்றிப் பிரதேசங்களை ஆக்கிரமித்தும், பாரம்பரிய தமிழ்ப் பிரதேசத்தை அங்கீகரிக்க மறுத்து இனவிகிதாசார குடிபேற்றத்தைப் புகுத்தியும் தமிழ்த்தேசிய இனத்தின் தேசிய இனத்தன்மையை அழித்தொழிக்கும் பாஸிஸ ஆட்சியைக் கண்டித்தும், கல்வி, பொருளாதார அபிவிருத்தி, தொழில்வாய்ப்பு, விவசாயம், பாதுகாப்பு போன்ற இன்னோரன்ன விடயங்களில் இனப்பாரபட்சம் காட்டியும் தமிழ்ப்பகுதிகளில் தொழிற்சாலைகளை மூடமுயற்சித்தும்வரும் போலித்தார்மீக அரசைக் கண்டித்தும், தொடர்ச்சியான போராட்டங்களில் மக்களைத் தயார்செய்ய கறுப்புப்பட்டி அணிந்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தல் வேண்டுமெனக்கேட்டுக் கொள்கின்றோம். [கு]

## மறியல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்றார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் திரு. பிரேமதாசா தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

"எதிர்க்கட்சிகள் நடத்தவிருக்கும் எதிர்ப்பு இயக்கம் அரசுக்கு எதிரானதல்ல. இது பொதுமக்களுக்கு எதிரானதே. மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படும்வகையில் எந்த நடவடிக்கையையும் தடுக்க அரசு தயங்காது.

"கடந்த இரண்டரை வருடங்களும் மக்கள்படிப்படியாக மேலும் ஆதரவளித்துவருகின்றனர். ஆனமடுவதேர்தலில் சுதந்திரக்கட்சி வெற்றிபெற்றிருந்தால் உங்களின் கோரிக்கைகளை செவிமடுக்கமுடியும்"

## அரசுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல் போராட்டங்களின்போது எந்த வன்செயலும் ஏற்படாது பாதுகாக்க ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்றார். (கு)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நவீனசந்தை வீதி ஸ்ரீஞான வைரவர் கோவில் மண்டல பூர்த்தி மகா சங்காபிஷேகம் இன்று நடைபெறும். விசேட மேளக்கச்சேரிகளும், வில்லிசையும் இடம்பெறும்.

## 4-வது மாநிலம்

(சென்னை)

மத்திய அரசில் பதவியிலிருக்கும் இந்திரா காங்கிரசுக்கு எதிரான கட்சி ஆட்சிபீடத்திலிருக்கும் 4-வது மாநிலம் தமிழ்நாடாகும். [இ]

## ராஜனின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாக தனக்குத் தகவல் கிடைத்ததாகவும் தெரிவித்த நீதவான் அவருக்கு கடும் எச்சரிக்கை செய்தார்.

2ம் எதிரி பணம் படைத்தவர் என்ற காரணத்தினால் பணத்தைக்கொண்டு நீதியை விலைக்கு வாங்கமுடியாதென்றும், இதுபோன்ற குற்றங்கள் புரிய முயற்சித்தால் தக்க நடவடிக்கைஎடுக்கப்படும் எனவும் நீதவான் இரண்டாவது சந்தேகநபரை எச்சரிக்கை செய்தார்.

மேற்படி வழக்கு விசாரணை இம்மாதம் 17ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. முதலாவது சந்தேகநபர் தொடர்ந்தும் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். (ஈ)

யாழ். நகரில் இன்று மாலை
கடைசி நாடகம்
யாழ். திறந்த வெளி அரங்கில்
மேஜர் சுந்தரராஜன்
மற்றும் திரைப்பட நடிகர்கள் நடிக்கும்
சென்னை என்னெஸ்ஸென் தியேட்டரின்
அவன்
பார்த்துப்பான்
சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் அற்புதமான நாடகம்
பிரதம அதிதி
திரு. பி. மகேந்திரன்
(வடபிராந்திய டி. ஐ. ஜி)
தலைமை:
திரு. யோகேந்திரா துரைசுவாமி
(யாழ். அரசாங்க அதிபர்)
டிக்கட் விபரம்: ரூபா 5, 10, 15, 25, 50
காட்சி முடிந்த பின் வெளியிடம் செல்ல பஸ் வசதி உண்டு.

ஊழியர்கள் தேவை
அனுபவங்கள்
புத்தக வியாபாரம்
கடுதாசி ஸ்ரேசனெறி வியாபாரம்
பத்திரிகை, சுவீப் ரிக்கற் டிலிவறி
இயந்திர சாதன மூலம் றூள் போடுதல்
புத்தகம் கட்டுதல்
இயந்திரக் கட்டரில் புத்தகம், கொப்பிகள் வெட்டுதல்
புத்தகங்கள், கொப்பிகள் பின் பண்ணுதல்
மேற்படி வேலைகள் தெரிந்த
மாநகர்சபை எல்லைக்குட்பட்டவர்கள் மட்டும்
நேரில் சான்றிதழ்களுடன் தொடர்பு கொள்ளவும்.
பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல: 44, பஸ்நிலைய முகப்பு,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### குப்பிழான் செல்லையா துரைசிங்கம்

ஓய்வு பெற்ற டிஸ்பென்சரும், முன்னாள் கன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநருமான குப்பிழான் செல்லையா துரைசிங்கம் காலமாகிவிட்டார். இவர் இலட்சுமியின் அன்புக்கணவரும், ரவீந்திரன் (U K), சுரேந்திரன், குலேந்திரன், புவீந்திரன், வாசுகி, மாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநெல்வேலி ஓய்வுபெற்ற அதிபர் இராசா, கணபதிப்பிள்ளை, இன்னத்துரை, சிவசம்புநாதன், நல்லம்மா, நாகம்மா, திருமதி இராசம்மா துரைசாமி ஆகியோரின் சகோதரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் குப்பிழானில் நடைபெறும். தகவல்: த. தருமலிங்கம், குப்பிழான்.
5949

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ..... யாழ்ப்பாணம் ...... வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜூன் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General Post office Sri Lanka under No. CE/8948/ 78. The Eelanaadu, Post Box No. 49, Telegram: "Eelanaadu, Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org